# 2016 டிசம்பர் 05ஆந் திகதியின் சபை அலுவல்கள்

**திகதி :** 2016-12-05

கௌரவ கரு ஜயசூரிய, சபாநாயகர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

**பத்திரங்கள் சமர்ப்பித்தல்**

2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆண்டறிக்கை

**மனுக்களைச் சமர்ப்பித்தல்**

பின்வரும் பாராளுமன்ற உறுப்பினரினால் பொதுமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன:-

(i) கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார - மூன்று மனுக்கள்
(ii) கௌரவ தயாசிறி ஜயசேகர
(iii) கௌரவ சுஜீவ சேனசிங்க
(iv) கௌரவ புத்திக பத்திறண - ஐந்து மனுக்கள்
(v) கௌரவ இம்ரான் மஹ்ரூப்

(மனுக்கள் பொதுமனுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும்)

**இன்றைய தினத்திற்கான சபையின் பிரதான அலுவல்கள்**

**ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017) - குழு**

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் (2017) ஒதுக்கப்பட்ட இருபதாம் நாள் இன்றாகும். - " குழு நிலை விவாதம்"

**ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை**

"ஹம்பாந்தோட்டை உப்பு லிமிடடை தனியார் மயப்படுத்தல்" தொடர்பான ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை கௌரவ நிஹால் கலப்பத்தி அவர்களால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனையடுத்து, 1854 மணியளவில் பாராளுமன்றமானது 2016 டிசம்பர் 06ஆந் திகதி செவ்வாய்க்கிழமை 0930 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

[வரவு செலவுத் திட்டம் 2017]

* இது ஒரு திருத்தப்படாத பதிப்பாகும். இத்தினத்தின் அலுவல்களின் அதிகார அறிக்கைக்காக தயவுசெய்து ஹன்சாட் அறிக்கையைப் பார்க்கவும்.